செய்தி வெளியீடு எண் : 2495 நாள் : 12.12.2023

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம், மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறது. சமீபத்தில் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் உபயோகப்படுத்தும் உதவி உபகரணங்கள் (இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி மற்றும் மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி) தண்ணீரில் மூழ்கி சேதமடைந்திருந்தால், அதனை பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, மேற்படி பாதிப்படைந்தவர்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்களின் கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொண்டு உரிய விவரங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு பெறப்படும் விவரங்களின் அடிப்படையில், சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அதன் மூலம் உபகரணங்கள் பழுது நீக்கம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | கைப்பேசி எண் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், வடசென்னை | 9499933589 | 044 – 29993612 |
| 2 | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், தென்சென்னை | 9499933470 | 044 – 24315758 |
| 3 | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், திருவள்ளூர் | 9499933496 | 044 – 27662985 |
| 4 | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், காஞ்சிபுரம் | 9499933582 | 044 – 29998040 |
| 5 | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், செங்கல்பட்டு | 9499933476 | 044 – 27431853 |

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**